Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 352/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | கௌதம் |
| Father's Name | -- | ஆறுச்சாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 18th day of March 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது பெரியகளந்தையில் குடியிருந்துவருகிறேன். நான் ஓட்டுநராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 18.08.2018 ம் நாள் நான் சோழாபுரிலிருந்து தமிழ்நாட்டிற்கு எனது லாரி பதிவு எண் TN41AM6199 ல் வந்துகொண்டிருந்தேன். 22.08.2018 அன்று நான் எனது லாரியை மதியம் 2 மணியளவில் எனது பெரியகளந்தையில் உள்ள எனது வீட்டிற்கு அன்று எனது வாகனத்தை நிறுத்திவிட்டேன். 26.08.2018 அன்று படுக்கச்செல்வதற்கு முன்பாக இரவு எனது வாகனம் நின்றுகொண்டிருந்ததை பார்த்தேன். 27.08.2018 அன்று காலை 5.30 மணியளவில் வண்டி எனது வீட்டின் முன்னால் இல்லை. நான் தேடிபார்த்தேன். நான் 29.08.2018 அன்று வண்டி கிடைக்காததால் நெகமம் காவல்நிலையத்தில் இதுசம்பந்தமாக புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகார் மனுவினை எனது மாமா சேகர் எழுத்துபூர்வமாக பதிவுசெய்தார். அந்த புகார் மனு அதசாஆ.1. போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தனர். 31.08.2018 அன்று போலிசார் கரடிவாவி சுடுகாட்டிற்கு பக்கத்தில் எனது வாகனம் கிடைத்தாக தகவல் கொடுத்தனர்.நான் அங்கு சென்று எனது வாகனத்தை அடையாளம் காட்டி காவல்நிலையம் எடுத்துவந்தோம். பின்பு லாரியை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுகொண்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் 5 புகைப்படங்களில் உள்ள லாரி என்னுடையதுதான். அவை அசாபொ.1 முதல் 6 ஆகும். போலிசார் இதுசம்பந்தமாக

என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை

வண்டி எனது அம்மா ராஜேஸ்வரியின் பெயரில் உள்ளது. நான் 2014 ல் இருந்து லாரி ஓட்டிவருகிறேன். எனது வீடும் கடையும் சேர்ந்தாற்போல்தான் உள்ளது, கடை அடைக்க இரவு சுமார் 10 முதல் 11 ஆகும். வண்டியை நான்தான் என் வீட்டின்முன்பாக நிறுத்தினேன். நான் வண்டியிலிருந்து சாவியை எடுக்கும் பழக்கம் கிடையாது. நான் வண்டி காணாமல்போன பிறகு பொள்ளாச்சி, கோவை, திருப்பூர் மெயின் ஜங்சனில் சுமார் 30,40 கி.மீ வரை பார்த்தேன். உடனடியாக நான் போலிசாரை அணுகவில்லை என்றால் சரிதான். நான் வண்டி காணாமல் போன பதட்டத்தில் இருந்ததால், உடனடியாக காவல்நிலையம் சென்று புகார் அளிக்கவேண்டும் என்று எனக்கு தோணவில்லை. நான் சொன்ன தேதியில் வண்டி காணாமல் போகவில்லை என்றால் சரியல்ல. வண்டி கிடைத்துவிட்டதாக போலிசார் தகவல் சொன்னவுடன் நான் வண்டி கிடைத்த இடத்திற்கு சென்றுவிட்டேன். நான் சொன்ன தேதியில் வண்டி காணாமல் போகவில்லை என்றாலும், கிடைத்த வண்டிக்கு போலிசார் கூறியதன்பேரில் பொய் புகார் கொடுத்தேன் என்றாலும், உள்ளூரில் எனது வண்டி கிடைத்தது என்றாலும்சரியல்ல. எனது வண்டி அன்றே கிடைத்துவிட்டது என்றாலும் போலிசார் கணக்கு காட்டுவதற்காக கேட்டுக்கொண்டதன்பேரில் பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மகாராஷ்டிரா சென்று திரும்பியதற்கு டிரிப் சீட் அப்போது தேவையில்லை.

மறுவிசாரணை இல்லை

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்.,

நடுவர் நீதிமன்றம் எண்.2
பொள்ளாச்சி

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 352/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | ராஜேஸ்வரி |
| Father's Name | -- | க/பெ ஆறுச்சாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 18th day of March 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது பெரியகளந்தையில் குடியிருந்துவருகிறேன். அசா.1 எனது மகன் ஆவார். 18.08.2018 எனது மகன் மகாராஷ்டிராவிலிருந்து லோடு ஏற்றிவந்து 22.08.2018 அன்று கோவையில் லோடு இறக்கிவிட்டு வீட்டிற்கு வந்து வண்டியை நிப்பாட்டி இருந்தார். வண்டியை கடைசியாக 26.08.2018 அன்று இரவு 11 மணிவரை பார்க்கும்போது இருந்தது. பின்பு காலை பார்க்கும்போது இல்லை. எனது மகன் அக்கம்பக்கத்தில் ஒரு நாள் முழுவதும் தேடிபார்த்தார். தேடியும் கிடைக்காததால் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துபார்த்தார்கள். காவல்நிலையத்தில் வைத்தும் விசாரித்தார்கள். பின்னர் வண்டி கிடைத்துவிட்டதாக கூறினார். எனது மகன் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து லாரியை மீட்டுக்கொண்டார். போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை

எனது மகன் வழக்கமாக வண்டியை பூட்டினால் சாவியை பாக்கெட்டிலோ வீட்டிலோ வைப்பார். முதலில் எனது கணவர் ஆறுச்சாமிதான் வண்டி காணாமல்போனதை பார்த்தார். அவர்சொல்லிதான் நாங்கள் சென்றுபார்த்தோம். எனது நங்கையா மகன் பாலகிருஷ்ணன் போலிசாருக்கு தகவல் கொடுத்தார். போலிசார் அன்றே வந்து பார்த்தனர். போலிசார் சம்பவ இடத்தினை அன்றே பார்த்தனர். நான் சொன்ன தேதியில் வண்டி காணாமல் போகவில்லை என்றாலும் எனது மகனுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 352/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | ஆறுச்சாமி |
| Father's Name | – | நாச்சிமுத்து |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 18th day of March 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது பெரியகளந்தையில் குடியிருந்துவருகிறேன். நான் ேஹாட்டல் கடை வைத்துள்ளேன். அசா.1 எனது 2 வது மகன். கடந்த சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் 18 ம் தேதி எனது மகன் லோடு இறக்கிவிட்டு 22 ந்தேதி வீட்டிற்கு வந்து லாரியை நிப்பாட்டினார். 27 ம் நாள் இரவு பார்க்கும்போது வண்டி இருந்தது. மறுநாள் 28 காலை பார்க்கும்போது வண்டி இல்லை. பக்கத்தில் வண்டியை தேடிபார்த்தோம். வண்டி கிடைக்காததால் காவல்நிலையத்தில் புகார் அளித்தோம். போலிசார் சம்பவ இடம் வந்து விசாரித்தனர். பின்னர் வண்டி கிடைத்துவிட்டதாக போலிசார் தெரிவித்தனர். வண்டியை அடையாளம் காட்டினோம். எனது மகன் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து வண்டியை பெற்றுக்கொண்டார்.போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை

எனது மகனை தவிர லாரிக்கு ஓட்டுநர்கள் வேறு யாரும் கிடையாது. அசா.1 எப்பொழுதும் வண்டியில் தான் சாவியை விட்டுவருவார். சம்பவத்திற்கு முன்பு லாரியின் சாவியை விட்டுவந்ததாக கூறினார். எனக்கு அதனை பற்றி அறிவில்லாததால் நான் வண்டியை பூட்டவில்லை. எனது மகனை பூட்டுமாறும் சாவியை எடுத்துவருமாறும் அறிவுறுத்தவில்லை.எதிரே உள்ள கேஸ் கம்பெனியில் கேமரா உள்ளது. அது தட்டுப்பபடவில்லை. பாலசுப்பிரமணியன் எனது அக்கா மகன். போலிசாரிடம் அன்றே அவர் தகவல்

தெரிவித்துவிட்டார். போலிசார் சம்பவ இடம் வந்துவிட்டனர். அங்குவந்து எங்களை விசாரித்தனர். அன்றே எனது மகனிடம் வண்டி காணாமல் போனது குறித்து விசாரித்து கையொப்பம் பெற்றுக்கொண்டனர்.

மறுவிசாரணை இல்லை

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்.,

நடுவர் நீதிமன்றம் எண்.2
பொள்ளாச்சி